செய்தி வெளியீடு எண்: 381 நாள்: 26.06.2019

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு அரசு
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
மின்கம்பியாள் உதவியாளர் தகுதிகாண் தேர்வு அறிவிப்பு

2019–ம் ஆண்டு ஆகஸ்ட் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் மின்கம்பியாள் உதவியாளர் தகுதிகாண் தேர்வு (Wireman Helper Competency Examination) நடைபெறவுள்ளது. இது குறித்து தகுதி வாய்ந்த கம்பியாள் உதவியாளர்களிடமிருந்தும், இத்துறையால் நடத்தப்பட்ட தொழிலாளர்களுக்கான மாலைநேர வகுப்பில் மின்கம்பியாள் பிரிவில் பயிற்சி பெற்றுத் தேறியவர்களிடமிருந்தும் மற்றும் தேசிய புனரமைப்புத் திட்டத்தின் கீழ் இத்துறையால் நடத்தப்பட்ட மின்சாரப் பணியாளர் மற்றும் கம்பியாள் தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தகுதி: விண்ணப்பதாரர் மின் ஒயரிங் தொழிலில் 5 வருடங்களுக்குக் குறையாமல் செய்முறை அனுபவம் உள்ளவராகவும், விண்ணப்பிக்கும் நாளில் 21 வயது நிரம்பியவராகவும் இருத்தல் வேண்டும். அதிகபட்ச வயது வரம்பு இல்லை.

இத்தேர்விற்குரிய விண்ணப்பப் படிவம் மற்றும் விளக்கக் குறிப்பேட்டினை, தமிழ்நாட்டில் உள்ள எந்த ஒரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திலிருந்தும் ரூ.10/– ரொக்கமாக, 28.06.2019 முதல் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தேர்வு மையங்களாக உத்தேசிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒரு தொழிற்பயிற்சி நிலையத்தை விண்ணப்பதாரரே தேர்வு செய்து அத்தேர்வு மையத்திற்கு அனுப்ப வேண்டும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | வடசென்னை | 12 | செங்கற்பட்டு | 23 | திருவண்ணாமலை |
| 2 | கோயமுத்தூர் | 13 | ஓசூர் | 24 | குன்னூர் |
| 3 | சேலம் | 14 | ஈரோடு | 25 | அரியலூர் |
| 4 | நாமக்கல் | 15 | திருச்சி | 26 | நீடாமங்கலம் |
| 5 | கடலூர் | 16 | உளுந்தூர்பேட்டை | 27 | நாகப்பட்டினம் |
| 6 | கரூர் | 17 | தஞ்சாவூர் | 28 | இராமநாதபுரம் |
| 7 | பெரம்பலூர் | 18 | மதுரை | 29 | திருநெல்வேலி |
| 8 | திண்டுக்கல் | 19 | தேனி | 30 | சிவகங்கை |
| 9 | புதுக்கோட்டை | 20 | விருதுநகர் | 31 | திருப்பூர் |
| 10 | நாகர்கோவில் | 21 | தூத்துக்குடி | 32 | தர்மபுரி |

போதுமான விண்ணப்பங்கள் பெறப்படாத நிலையில் மேற்கண்ட தேர்வு மையங்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் அருகிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு அங்கு தேர்வுகள் நடைபெறும். தேர்வு மையம் இறுதி செய்வது தொடர்பாக துறைத் தலைவரின் முடிவே இறுதியானது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மேற்கண்ட அரசினர் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்களுக்கு கிடைக்க வேண்டிய கடைசித் தேதி 26.07.2019.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9